செ.வெ.எண் : 977/2017 நாள் : 16.12.17

**கன்னியாகுமரி மாவட்டம்**

**ஓகி புயல் நிவாரணப்பணிகளை விரைந்து முடிக்க**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் உத்தரவு.**

---

கன்னியாகுமரி மாவட்டத்தில், ஓகி புயலினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண வழங்கும் பணிகளின் முன்னேற்றம் குறித்து அனைத்து துறை அலுவலர்களுடனான கலந்தாய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக வருவாய் கூட்ட அரங்கில் இன்று(16.12.2017) நடைபெற்றது.

அனைத்துதுறை அலுவலர்களுடனான கலந்தாய்விற்கு பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஓகி புயலினால் அனைத்து தரப்பு மக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான நிவாரண உதவிகளை அறிவித்து, வழங்க உத்தரவிட்டுள்ளார்கள். அதனடிப்படையில் நிவாரண உதவிகள் வழங்குவதற்கு ஏதுவாக சேதம் கணக்கெடுக்கும் பணிகள், உறுதிபடுத்தும் பணிகள் மற்றும் நிவாரண உதவிகள் வழங்கும் பணிகள் போர்கால அடிப்படையில் நடைபெற்று வருகிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஓகி புயலால் 16 நபர்கள் உயிரிழந்துள்ளனர். 28 நபர்கள் காயமடைந்துள்ளனர். 4094 விவசாய்களின் 510.03 ஹெக்டேர் நிலப்பரப்பிலான நெல் மற்றும் தென்னை பயிர்களும், 22,102 விவசாயிகளின் 4784.697 ஹெக்டேர் நிலப்பரப்பிலான வாழை, கிழங்கு ரப்பர் மற்றும் இதர தோட்டக்கலைப்பயிர்களும் சேதமடைந்ததாக இதுவரை உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஓகி புயலினால் மாவட்டத்தில் முற்றிலுமாக சேதமடைந்த 1,096 வீடுகளுக்கும், பகுதி சேதமடைந்த 5,130 வீடுகளுக்கும் என மொத்தம் 6,226 வீடுகள் சேதமடைந்துள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது. 7450 கோழிகளும், 204 கால்நடையினங்களும் என மொத்தம் 7654 கோழிகள் மற்றும் கால்நடையினங்கள் இறந்துள்ளன. மாவட்டத்தில் 14,579 மின்கம்பங்களும், 802 கி.மீ நீளத்திலான மின் கம்பிகளும் சேதமடைந்து மாவட்டம் முழுவதும் மின் விநியோகம் பாதிக்கப்பட்டது.

ஓகி புயலினால் மாவட்டத்தில் முற்றிலும் சேதமடைந்த வீடுகளுக்கு ரூ.5 கோடியே 48 லட்சமும், பகுதி சேதமடைந்த வீடுகளுக்கு ரூ.2 கோடியே 10 லட்சத்து 33 ஆயிரமும், முற்றிலும் பொருட் சேதமடைந்த 171 குடும்பத்தினருக்கு ரூ.6 லட்சத்து 49 ஆயிரத்து 800-ம், இறந்துள்ள கோழி மற்றும் கால்நடையினங்களுக்கு ரூ.23 லட்சத்து 7 ஆயிரத்து 500-ம் இதுவரை நிவாரணத்தொகையாக வழங்கப்பட்டுள்ளது. மாவட்டத்தில் உள்ள நகராட்சிப்பகுதிகள் மற்றும் பேரூராட்சிப்பகுதிகளில் 100 சதவீதம் மின்சீரமைப்பு பணிகள் நிறைவுற்றுள்ளது. 95 ஊராட்சிகளில் 90 ஊராட்சிகளுக்கு முழுவதுமாக மின்விநியோகம் வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 5 ஊராட்சிகளில் மலைப்பகுதி குக்கிராமங்களுக்கு செல்லும் மின் பாதைகள் முழுவதும் மிகுந்த சேதமடைந்துள்ளதால், சீரமைக்கும் பணிகள் தொடர்ந்து துரிதமாக நடைபெற்று வருகின்றது.

மேலும், ஓகி புயலினால் சேதமடைந்த இடங்களை சீரமைக்கும் பணி போர்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதுவரை கணக்கிடப்படாமல் விடுபட்ட, சேதமடைந்த விவசாய நிலங்களும் கண்டறியப்பட்டு நிவாரணம் வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அனைத்து நிவாரணப்பணிகளையும் விரைந்து முடிக்க அனைத்து துறை அலுவலர்களுக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது. என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்கள்.

இக்கூட்டத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.மா.துரை,இ.கா.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சோ.இளங்கோ, மாவட்ட ஆட்சியரின நேர்முக உதவியாளர் (பொது) மரு.தா.பரிதா பானு மற்றும் அனைத்து துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்**